


11.05.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு 4-வது கட்டமாக நாளைமறுநாள் நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை ஓய்கிறது.

2. தேசிய ஜனநாயக கூட்டணி 400-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெறும் என்று பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. காங்கிரஸ் கட்சி மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி வருவதாக அதன் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் 10-ம் வகுப்பு துணைத்தேர்வுகள் ஜுலை 2-ம் தேதி தொடங்கும் என பள்ளிக்கல்வி துறை அறிவித்துள்ளது.

5. கெய்ரோவில் நடைபெறும் ஸ்குவாஷ் உலக சாம்பியன்பட்ட போட்டியில் இந்தியாவின் ரமிட் டான்டன் 2-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

தேர்தல்

மக்களவைக்கு 4-வது கட்டமாக நாளைமறுநாள் நடைபெறும் வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் இன்று மாலை ஓய்வதால் அரசியல் கட்சி தலைவர்கள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

பீஹார், ஜார்கண்ட், மஹாராஷ்டிரா உள்ளிட்ட 8 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களின் 96 மக்களவை தொகுதிகளுக்கு நடைபெறும் இந்த தேர்தலை ஒட்டி பிரதான அரசியல் கட்சிகயினர், வேட்பாளர்களும் வீதிவீதியாகவும், வீடு வீடாகவும் சென்று வாக்குகளை சேகரித்து வருகின்றனர்.

ஒடிசா மாநிலம் கந்தமாலில் இன்றுகாலை தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி 400-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெலாங்கீர், பர்கர் மக்களவை தொகுதிகளிலும் இன்று பிரச்சாரம் மேற்கொள்ளும் அவர், வாகன பேரணியிலும் பங்கேற்கிறார்.

பி.ஜே.பி. தேசிய தலைவர் திரு. ஜே.பி. நட்டா திருப்பதியில் வாகன பேரணியில் பங்கேற்றார்.

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி மஹாராஷ்டிர மாநிலம் நந்தர்பாரில் மேற்கொண்ட பரப்பரையில் மக்களின் பிரச்சனைகளை அறிந்து கொள்ள காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல்காந்தி 4 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் நடைபயணம் மேற்கொண்டதாக குறிப்பிட்டார்.

மக்களின் உரிமைகளுக்காக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து போராடியதாகவும், திருமதி பிரியங்கா காந்தி கூறியுள்ளார்.

திரு. ராகுல்காந்தி ஆந்திர பிரதேச மாநிலத்தின் பல்வேறு இடங்களில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

இம்மக்களவை தேர்தலுடன் ஆந்திர மாநிலத்தின் 10 சட்டப்பேரவை தொகிகளுக்கும் நாளைமறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்நிலையில் குஜராத் தாஹோத் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட பிராத்தம்பூர் வாக்குசாவடி மையத்தில் இன்று மறுவாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

கடந்த 7-ம் தேதி நடைபெற்ற 2-வது கட்ட வாக்குப்பதிவின் போது இப்பகுதியில் முறைகேடுகள் நடைபெற்றதால் தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கு ஏற்ப இவ்வாக்குச்சாவடி மையத்தில் மறுவாக்குப்பதிவு இன்றுகாலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணிவரை நடைபெறுகிறது.

மக்களவைக்கு 5-ம் கட்டமாக வரும் 20-ம் தேதி 49 தொகுதிகளிலும்,

6-ம் கட்டமாக 25-ம் தேதி 57 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் இதற்கான பரப்புரையில் அரசியல் தலைவர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் வரும் 1-ம் தேதி அசாம், ஒடிசா, உத்தரபிரதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 57

தொகுதிகளுக்கு நடைபெறும் 7-வது இறுதிகட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் செவ்வாய்க்கிழமை முடிவடைகிறது.

மனுக்கள் வரும் புதன்கிழமை பரிசீலிக்கப் படுகின்றன.

நாடுமுழுவதும் 7 கட்டங்களாக நடைபெறும் தேர்தலின் வாக்குகள் அடுத்தமாதம் 4-ம் தேதி எண்ணப்படுகின்றன.

□□□□□□□

ஜெய்சங்கர்

பேச்சுரிமை என்பது தீவிரவாதத்திற்கு ஆதரவு அளிப்பது அல்ல என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் விளக்கம் அளித்துள்ளார்.

கனடாவில் நடைபெறும் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக செய்தி முகமைக்கு அவர் அளித்த பேட்டியில் இந்த பிரச்சனை குறித்து தெரிவிக்கும் போதெல்லாம் பேச்சுரிமையை அந்நாடு காரணம் காட்டுவதாக குறைகூறினார்.

இந்தியா - சீனா உறவு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், அண்டை நாட்டுடன் சுமூகமான உறவையே இந்தியா விரும்புவதாகவும், ஆனால் எல்லைப்பகுதிகளில் நடைபெறும் நடவடிக்கைகளால் இருநாடுகளுக்கு இடையே உறவு சுமூகமாக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்தியா சீனாவுடன் தொடர்ந்து பேசி வருவதாகவும் பிரச்சனைக்குரிய விஷயங்கள் குறித்து சுமூக தீர்வு ஏற்பட்டால் இரு நாடுகளுக்கு இடையே உறவு மேம்படும் என்றும் அவர் கூறினார்.

□□□□□□□

தேசிய தொழில்நுட்ப தினம்

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

1998-ம் ஆண்டு இதே நாளில் ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் நாட்டின் முதலாவது அணுஆயுத ஏவுகணை சோதனை வெற்றிகரமாக மேற்கொண்டதை நினைவுகூறும் வகையில் இந்நாள் கொண்டாடப் படுகிறது.

விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அறிவியல் தொழில்நுட்ப பொறியியல் வல்லுநர்களின் சாதனைகளை போற்றும் விதமாக தேசிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

□□□□□□□

மதிப்பெண் சான்றிதழ்

தமிழகத்தில் 10-ம் வகுப்பு துணைத்தேர்வுகள் ஜுலை மாதம் 2-ம் தேதி தொடங்கி 8-ம் தேதிவரை நடைபெறும் என பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

துணைத்தேர்விற்கு இன்றுமுதல் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும், இவர்களுக்கான சிறப்பு வகுப்புகள் வரும் திங்கட்கிழமை முதல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று வெளியான நிலையில் தற்காலிக மதிப்பெண் சான்றிதழை மாணாக்கர் வரும் திங்கட்கிழமை முதல் தாங்கள் பயின்ற பள்ளிகளில் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

விடைத்தாள் மறு கூட்டலுக்கு வரும் 15ஆம் தேதி முதல் 20ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம்.

□□□□□□□

பறவைகள் தினம்

சர்வதேச வலசை பறவைகள் தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

உலகின் பல்வேறு இடங்களிலிருந்து பிற பகுதிகளுக்கு தட்பவெட்பம், இனப்பெருக்கம் உள்ளிட்ட காரணங்களுக்காக பறவைகள் புலம்பெயர்கின்றன.

சுற்றுச்சூழல் சமநிலையில் முக்கிய பங்காற்றும் இப்பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாப்பதில் உலகளாவிய ஒருங்கிணைப்பின் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

□□□□□□□

கல்லூரி கனவு

தூத்துக்குடியில் உயர்கல்விக்கானகல்லூரி கனவு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இதில் உரையாற்றிய இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி திரு. அசீர் பாக்கியராஜ் 2047-ம் ஆண்டில் நிலவிற்கு இந்தியர்களை அனுப்புவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்

.. வாய்ஸ் ..

விழுப்புரத்தில் உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சியை தொடங்கிவைத்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பழனி உயர்கல்வி மாணாக்கர் சேர்க்கையில் 100 சதவிகித இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

□□□□□□□

பிரதீப்குமார்

தமிழகத்தில் அரசு, அரசு உதவிபெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடப்பாண்டிற்கான மாணாக்கர் சேர்க்கை அடுத்த மாதம் 7-ம் தேதிவரை நடைபெறுகிறது.

திருச்சி, புள்ளம்பாடி, மணிகண்டம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு 750 ரூபாய் மாதாந்திர உதவித்தொகை, விலையில்லா பேருந்து அட்டை உள்ளிட்ட பல்வேறு சலுகைகளுடன் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு உறுதிசெய்யப் படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

□□□□□□□

கன்னியாகுமரி வாய்ஸ்

கோடை விடுமுறையை முன்னிட்டு சர்வதேச சுற்றுலா தளமான கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகளின் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□

கோடை விழா

கொடைக்கானலில் 61-வது மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா வரும் 17-ம் தேதி தொடங்குகிறது.

வரும் 26-ம் தேதிவரை 10 நாட்கள் நடைபெறும் இக்கோடை விழாவில் சுற்றுலாத்துறையின் சார்பில் பாரம்பரிய மற்றும் கிராமிய கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், மீன்பிடித்தல், படகு அலங்கார அணிவகுப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பூங்கொடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே உதகையில் நடைபெறும் மலர் கண்காட்சியை ஏராளமான சுற்றுலா பயணிகள் கண்டுகளித்து வருகின்றனர்.

இந்த ஆண்டு வெளி மாநில சுற்றுலா வாகனங்களுக்கு இ-பாஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான பணிகள் எளிமைப் படுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

□□□□□□□

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□

மழை

விருதுநகர் அருகே செட்டிப்பட்டி, கன்மார்பட்டி, சூளக்கரை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சூரைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததை அடுத்து 5 ஏக்கரில் பயிரிடப்பட்ட வாழை மற்றும் ஏராளமான கொடிக்காய் மரங்கள் சேதமடைந்தன.

நீலகிரி மாவட்டம் பந்தலூர் தோவாளை உள்ளிட்ட பகுதிகளில் கனமழையால் விவசாயப் பணிகள் விறுவிறுப்படைந்துள்ளன.

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இரண்டாவது நாளாக இன்றும் மழை பெய்ததை அடுத்து மாவட்டத்தில் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவுகிறது

□□□□□□□

உலக அருங்காட்சியக தினம்

உலக அருங்காட்சியக தினம் வரும் 18-ம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி மதுரை காந்தி அருங்காட்சியக வளாகத்தில் தமிழர் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் இன்று தொடங்கின.

பல்லாங்குழி, தட்டாங்கல், தாயம், நொண்டியாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளில் வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

□□□□□□□

இருவரி

சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் உயர்கல்விக்கு வழிகாட்டும் நிகழ்ச்சி நாளைமறுநாள் நடைபெற உள்ளதாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

□□□□□□□

ஸ்குவாஷ்

கெய்ரோவில் நடைபெறும் ஸ்குவாஷ் உலக சாம்பியன்பட்ட போட்டியில் இந்தியாவின் ரமிட் டான்டன் 2-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்

அமெரிக்காவின் பரோஸ்கானை 11-1, 11-3, 11-3 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார்.

நாளை நடைபெறும் 2-வது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தின் முகமது ஷோர் பெகியை அவர் எதிர்கொள்கிறார்.

□□□□□□□

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

தலா 16 புள்ளிகளுடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் முதலிடத்திலும்

ராஜஸ்தான் ராயல்ஸ் 2-ம் இடத்திலும் உள்ளன.

14 புள்ளிகளுடன் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் 3-வது இடத்திலும்

12 புள்ளிகளுடன் சென்னை சூப்பர் கிங்ஸ் 4-ம் இடத்திலும் உள்ளன.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.